Judicial Form No.53
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

**Case No.** : MC.9/2023
**Witness for Prosecution** : PW1
**Name** : நந்தினி **Taluk** :
**Father's / Husband Name** : ஞானசேகரன் **Calling** :
**Village** : அசரம்பட்டி **Age** : 33

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24.09.2025.
எதிரி ஆஜர்.
துவக்க நேரம்– 02.50 PM

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1) திருமணத்திற்கு பின்னிட்டு எனது பெற்றோர்கள் எனக்கு நகை எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். குழந்தைக்கு செய்தார்கள். மனுவில் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் திருமணத்திற்கு பின்னிட்டு எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் சரிதான். ம.சா.ஆ–6 புகைப்படத்தில் காணப்படும் நான் அணிந்திருக்கும் 3 அடுக்கு சையின் எதிர்மனுதாரர் செய்தது தான் என்றால் சரியல்ல. தாலிக்கொடி கணவர் செய்து கொடுத்தது தான் என்றால் இல்லை. தாலிக்கொடி 5 சவரன், சையின் 3 சவரன் என்றால் சரிதான்.

2) திருமணத்தின் போது எனக்கு அனுவிக்கப்பட்ட நகை என்னவென்றால் நெக்லஸ் 3 பவுன், மற்றொரு நெக்லஸ் 7 பவுன், தோடு 1 பவுன், சையின் 5 பவுன். ம.சா.ஆ.6 புகைப்படத்தில் காணப்படும் தோடு என் கணவர் செய்து கொடுத்தது தான் என்றால் எனது அம்மா வீட்டில் செய்யப்பட்டது. வேறு தோடு என் கணவர் செய்து கொடுத்துள்ளார் என்றால் இல்லை. திருமணத்திற்கு பிறகு எனது கணவர் 5 பவுன் தாலி, 3 பவுன் 3 அடுக்கு செயின் மற்றும் ஒரு ஜோடி தோடு ஆகியவை செய்து கொடுத்துள்ளார், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மேலே குறிப்பிட்டுள்ள நகைகள் என் வசம் உள்ளது என்றால் சரிதான்.

3) ஊத்தங்கரை சார்பு நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் மீது நான் சேர்ந்து வாழ எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க தயாராக இல்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரரிடம் இருந்து விவாகரத்து பெற தயாராக உள்ளேன் என்றால் ஆம். காவேரிப்பட்டிணம் தோட்டக்கலை துறையில் கணக்காளராக நான் வேலை செய்தேன் என்றால் இல்லை. தோட்டக்கலை துறையில் வேலை செய்து தற்போது மாற்றி கூறுகிறேன் என்றால் இல்லை. நான் எவ்வித காரணமும் இல்லாமல் என் கணவரை பிரிந்து வாழும் நிலையில், என் கணவர் சேர்ந்து வாழ முயற்சித்தும் அதற்கு ஒத்துழைப்பு தராத நிலையில் நான் பாரமரிக்கும் தொகை கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல.

4) எதிர்மனுதாரர் என்னையும், குழந்தையும் பாரமரிக்க தயாராக இருக்கும் சூழ்நிலையில் நான் தான் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றால் மனுதாரர் பாதிக்கப்பட்டுள்ளதால் அவருடன் சேர்ந்து வாழ இயலாது. நான் வேலைக்கு சென்று சம்பாதிக்க வாய்ப்பு உள்ளதால் எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்சம் கோர இயலாது என்றால் சரியல்ல. மனுவில் எதிர்மனுதாரருக்கு எதிராக கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருக்கு எதிராக சாட்சியத்தில் கூறியவை அணைத்தும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5) எதிர்மனுதாரருக்கு தொந்தரவு தரவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான சங்கதிகளுடன் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுவுக்கு முகாந்திரம் இல்லாததால் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 03.10 PM.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/-D.Saravanan
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)